**தேசிய வகை மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி, காப்பார்**

**அறிவியல் ஆண்டு5**

**பருப்பொருள்**

பெயர் : வகுப்பு :

பயிற்சி

1. எஃது உலர்தலைப் பற்றிய சரியான கூற்றாகும்?


| | | |
|---|---|---|
| P | - | எந்த வெப்பநிலையிலும் நிகழும் |
| Q | - | 100°C மட்டுமே நிகழும் |
| R | - | திரவத்தின் மேற்பரப்பில் மட்டுமே ஏற்படும் |
| S | - | சுற்றுப்புற வெப்பநிலை அதிகரித்தால் உலர்தலின் அளவும் அதிகரிக்கும் |


A P, R மட்டும் B Q, S மட்டும்
C P, Q, S மட்டும் D P, R, S மட்டும்

2. மாறன், நெளிந்து போன மேசைப்பந்தை வெந்நீரில் போட்டப்பிறகு அது மீண்டும் உருண்டையாகி விட்டதைக் கண்டான். இதற்குக் காரணம் ________________

A சுற்றிலும் உள்ள காற்று மேசைப்பந்தினுள் நுழைந்து விட்டது
B மேசைப்பந்தினுள் உள்ள காற்றின் அளவு குறைந்து விட்டது
C மேசைப்பந்தினுள் உள்ள காற்று வெப்பப்படுத்தும்போது சுருங்குகிறது
D மேசைப்பந்தினுள் உள்ள காற்று வெப்பப்படுத்தும்போது விரிவடைகிறது

3. கீழ்க்காணும் படம் ஓர் ஆராய்வில் பலூன்களின் நிலையைக் காட்டுகின்றது.


உடைப்பதற்கு முன்


உடைத்தப் பின்

இந்த ஆராய்வில் எடுக்கக் கூடிய இறுதி முடிவு என்ன?

A காற்று இலேசானது
B காற்று வெற்றிடத்தை நிரப்பும்
C காற்றுக்குக் கொள்ளளவு உண்டு
D காற்றுக்குப் பொருண்மை உண்டு



LIVEWORKSHEETS

4. படம், திரவத்தின் தன்மைகளைப் பற்றி ஆராய மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையைக் காட்டுகின்றது.



நீள் உருளை அளவி



குவளை



பாத்திரம்

எது மேற்கண்ட நடவடிக்கையின்வழி கண்டறியப்படும் திரவத்தின் தன்மை ஆகும்?

A திரவத்திற்குப் பொருண்மை உண்டு
B திரவத்திற்கு நிலையான வடிவம் இல்லை
C திரவத்திற்கு நிலையான கொள்ளளவு உண்டு
D திரவம் வெற்றிடத்தை நிரப்பும்

5. பின்வருவனவற்றுள் உலர்தல் பற்றிய தவறான கூற்று எது?

A 100°C இல் மட்டும் ஏற்படும்
B தொடர்ந்து ஏற்படும்
C நீரின் மேற்பரப்பில் மட்டும் ஏற்படும்
D திரவத்தை ஆவியாக மாற்றும்

6. பின்வருவனவற்றுள், எது திடப்பொருளாகும்?

A உயிர்வளி
B மேசை
C பாதரசம்
D புகை மூட்டம்

7. பின்வரும் தகவல்கள் X, Y, Z எனும் சூழ்நிலைகளைக் காட்டுகின்றன.

X - ஈரமான ஆடை காய்தல்
Y - பனிக்கட்டி கரைதல்
Z - மேக உருவாக்கம்


கீழ்க்காண்பனவற்றுள் எது X, Y, Z ஆகியவற்றைப் பிரதிநிதிக்கிறது?

| | X | Y | Z |
|---|---|---|---|
| A | உருகுதல் | திண்மமாகுதல் | உலர்தல் |
| B | திண்மமாகுதல் | காற்று | உருகுதல் |
| C | உலர்தல் | உருகுதல் | திண்மமாகுதல் |
| D | உலர்தல் | உறைதல் | திண்மமாகுதல் |



LIVEWORKSHEETS

8. படம், நீரில் ஏற்படும் நிலைமாற்றத்தைக் காட்டுகிறது. பின்வருவனவற்றுள் எவை கீழ்க்காணும் நடவடிக்கையின் செயற்பாங்காகும்?




| | X | Y |
|---|---|---|
| A | கொதித்தல் | திண்மமாகுதல் |
| B | கொதித்தல் | உலர்தல் |
| C | உலர்தல் | கொதித்தல் |
| D | திண்மமாகுதல் | கொதித்தல் |

௯. நம்மைச் சுற்றிக் காணப்படும் பொருள்கள் அனைத்தும் திடம், திரவம், வாயு ஆகிய நிலைகளில் காணப்படுகின்றன. இவற்றை நாம் பருப்பொருள் என்று அழைக்கின்றோம். கீழ்க்காணும் அட்டவணையை நிறைவு செய்க.

| நடவடிக்கை | செயற்பாங்கு | பருப்பொருளின் நிலை மாற்றம் |
|---|---|---|
| அறை வெப்பநிலையில் வைக்கப்பட்ட பனிக்கட்டி  | உருகுதல் | திடம் ⟶ திரவம் |
| கொதிக்கும் வரை சூடாக்கப்பட்ட நீர்  | (அ) ............................ | (ஆ) ............................ |
| பனிக்கட்டியாகும் வரை குளிர்படுத்தப்பட்ட நீர்  | (இ) ............................ | (ஈ) ............................ |



| | |
|---|---|
| கொதித்தல் | திடம் → வாயு |
| உறைதல் | திரவம் → திடம் |
| உலர்தல் | திரவம் → வாயு |
| திண்மமாகுதல் | வாயு → திரவம் |

LIVEWORKSHEETS